**சுருக்கம்**

திட்டம் மற்றும் வளர்ச்சி – விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சை பிரிவிற்கு தனிவார்டு ரூ.163.66 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல் – நிர்வாகம் மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எப்–1) துறை**

அரசாணை (நிலை) எண்.158

நாள்: 26.04.2018
விளம்பி, சித்திரை –13
திருவள்ளுவர் ஆண்டு, 2049
படிக்க:

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநரின் கடித எண். 80722/திவ1/5/2015, நாள் 18.08.2017.

**********

**ஆணை:**

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்கள் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் அரசு மருத்துவமனை 164 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது எனவும் இம்மருத்துவமனையில் மாதம் ஒன்றுக்கு 50 முதல் 60 வரை கண் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது என்றும் இம்மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை பெற்ற நோயாளிகள் அவசர சிகிச்சைப் பிரிவில் தங்கி சிகிச்சைப் பெறுவதால் தொற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், இம்மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் அனைவரும் மிகவும் ஏழை நோயாளிகள் என இணை இயக்குநர் தெரிவித்துள்ளார் என்றும் இம்மருத்துவமனைக்கு வரும் பொது நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழ்நிலையில் கண் சிகிச்சைக்கு தனிவார்டு என இல்லாத சூழ்நிலையில் கண்சிகிச்சைக்கு தனிப்பிரிவு அமைப்பது அவசியம் என இணைஇயக்குநர் நலப்பணிகள் விருதுநகர் அவர்கள் தெரிவித்துள்ளதாக மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

2. ஆகையால், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்கள் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சை பிரிவுக்கென தனிவார்டு அமைப்பதற்காக ரூ.181.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சை பிரிவுக்கென தனிவார்டினை அமைப்பதற்காக ரூ.163.66 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தி மூன்று இலட்சத்து அறுபத்து ஆறாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் கட்டிட பணிகள் மேற்கொள்ள நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(த.தி.பா.)

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும். ( மானியம் 39 02)

" 4210 மருத்துவமும் பொது சுகாதாரமும் குறித்த மூலதனச் செலவு – 01 நகர்ப் பகுதி சுகாதாரப்பணிகள் – 110 மருத்துவமனைகளும் மருந்தகங்களும் (மருந்தாக்கியல் துறை உட்பட) – மாநிலச் செலவினம் – JA கட்டடங்கள் –16 பெரும்பணிகள்"

( த. தொ.கு.4210–01–110 JA–1602)

5. மேலே பத்தி 3 ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புது துணைப் பணி குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன்மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A"யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு–செலவு பொது – I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தலைமை பொறியாளர் (கட்டடம்), சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018–2019 ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வரவு–செலவு பொது / சுகாதாரம்II)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதி துறை அ.சா.கு.எண். 19050 / சுகாதாரம்–II/ 2018 நாள். 20.04.2018 மற்றும் கூடுதல் நிதிபொதுக்கப் பேரேட்டு எண். 99, ( தொன்னூற்றொன்பது ) பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது .

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை– 6.
இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்.
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) விருதுநகர் மாவட்டம், மதுரை.
மாநிலத் தலைமைக் கணக்காயர், சென்னை–18
மாநிலத் தலைமைக் கணக்காயர்(தணிக்கை), சென்னை–18

நகல்:
நிதி (சுகாதாரம் – II/வ.செ. பொ–I/ பொ– I I/ பொ.ப.I)
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை) சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை – 9
உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.